Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, AUGUST 29 2023

செவ்வாய்க்கிழமை ஒகஸ்ட் 29, 2023 | ஒளி: 09 கதிர் 072 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# பட்டங்களை பறக்கவிட தடை

பட்டங்களை பறக்கவிடுவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும், உள்ளூர் மக்களுக்கு அறிவிக்க நடமாடும் வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இரத்மலானை, கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களை அண்மித்த பகுதிகளில் விமானங்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இலங்கை – இந்திய பாலத்துக்கு

# சர்வஜன வாக்கெடுப்பு தேவை



**பாகிஸ்தான், பங்களாதேஷ் கடந்த காலத்தில் இந்தியாவின் பகுதிகளாக இருந்தன. இலங்கை இந்தியாவின் மாநிலமாக இருக்கவில்லை**

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் அமைக்கப்படுமானால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பல பிரச்சனைகள் இருப்பதாக தெரிவித்த அவர், இந்திய-இலங்கை உறவுகள் வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்துடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ராகம தெவத்த பசிலிக்காவில் நடைபெற்ற ஆராதனை ஒன்றில் கலந்து கொண்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

பண்டைய மன்னர்கள் இந்தியாவுடனான தங்கள் உறவுகளை வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்துடன் மட்டுப்படுத்தினர் என்றும் பாலம் அமைப்பதற்கான முன்மொழிவு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

# முதலீடுகள் குறித்து உஷாராக இருங்கள்




இணையவழித் தளங்களூடாகத் தொழிற்படுகின்ற சில திட்டங்கள் பணத்தை வைப்புச் செய்யுமாறு அல்லது முதலிடுமாறு முதலீட்டாளர்களை தவறாக வழிநடாத்துகின்றன என்பதனைக் குறித்துக்காட்டுகின்ற பல முறைப்பாடுகள் அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# லேசர் கதிர்களை பாய்ச்சு யானைகளை குழப்ப முயற்சியா?



லேசர் கதிர்களை பாய்ச்சு யானைகளை குழப்பிவிட்டு கண்டி தலதா பெரஹராவை சீர்குலைக்கும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் உள்ளதா என்பதை ஆராயுமாறு அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண கோரியுள்ளார்.

பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியே, மேற்படி காரணத்தை ஆராயுமாறு கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

# அமைச்சரவை அனுமதித்ததும் கொடுப்பனவு அதிகரிக்கும்



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நாளாந்த கொடுப்பனவு அமைச்சரவை அனுமதி வழங்கியதும் அதிகரிப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அமைச்சரவைப்பத்திரம் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை அனுமதி கிடைத்தவுடன் உரிய தீர்மானம் உடனடியாக அமுல்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# காலி சிறைச்சாலை கட்டுப்பாடு தளர்வு



காலி சிறைச்சாலையில் பற்றீரியா தொற்று பரவியிருந்த காரணத்தால், கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் கைதிளைப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## காணிகள் விடுவிப்பு குறித்து

# குருந்தூர்மலைக்கு கள விஜயம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியில் தமிழ் மக்களினுடைய பூர்வீக காணிகள் தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த காணிகள் விடுவிப்பது தொடர்பில் அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் குறித்த பகுதிக்கு திங்கட்கிழமை (28) விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

குருந்தூர் மலை பகுதியிலே 1933.05.12 அன்று வர்த்தமானி ஊடாக 78 ஏக்கர் 2 ரூட் 12 பேர்ச் காணிகள் தொல்பொருள் திணைக்களத்திற்காக எடுக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# தொழிலாளர் நிதிகளை பயன்படுத்த வேண்டாம்

## கொழும்பில் கூட்டு தொழிற்சங்க போராட்டம்

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றின் நிதியைப் பயன்படுத்துவதற்கான உத்தேச அரசாங்கத் திட்டத்தை எதிர்த்து, 12க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளால், கொழும்பில் திங்கட்கிழமை கூட்டுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2




## ஒரு பகுதியையேனும்

# காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கவும்

## வடக்கு ஆளுநரிடம் சிறிதரன் எம்.பி கோரிக்கை

நிதர்ஷன் வினோத்



கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் ஒருபகுதியையேனும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண ஆளுநரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# நடனமாடிய இருவர் உயிரிழந்தனர்

## இருவேறு பகுதிகளில் சம்பவம்



இரண்டு இருவேறுபட்ட வைபவங்களில் நடனமாடிய இருவர் உயிரிழந்த சம்பவங்கள், யாழ்ப்பாணம் மற்றும் ஹொரண பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார்

வெல்லம்பிட்டிய கித்தம்பஹூவ பிரதேசத்தில் திங்கட்கிழமை (28) மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 47 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# திருமலையில் பௌத்த பிக்குகள் வீதி மறியல்

அபு அலா

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் சில பொதுமக்கள், திங்கட்கிழமை (28) காலை தொடக்கம் மதியம் வரை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



# விகாரை அமைக்க அனுமதி மறுப்பு

திருகோணமலை- நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் திங்கட்கிழமை (28) இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், விகாரை நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பிக்குகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதால் இக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## இலங்கை – இந்திய பாலத்துக்கு
# சர்வஜன வாக்கெடுப்பு தேவை

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் கடந்த காலத்தில் இந்தியாவின் பகுதிகளாக இருந்தாக சுட்டிக்காட்டிய அவர், இலங்கை இந்தியாவின் மாநிலமாக இருக்கவில்லை என்றும் இலங்கை எப்போதுமே ஒரு தனி நாடாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நமது நாடு எப்போதும் சுதந்திர நாடாகவே இருந்து வருகிறது எனவும் எந்த நாட்டுக்கும் அடிமையாக இருந்ததில்லை எனவும் இலங்கை வேறொரு நாட்டிலிருந்து பிரிந்து செல்லவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

1977ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரமே இன்று நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது என்றார்.

இந்தியாவின் உப மாநிலமாக இலங்கையை மாற்ற முயல்வதாகவும் பாலத்தை நிர்மாணிப்பதால் இந்தியாவின் நலன்களே நிறைவேறும் பல நிபுணர்களும் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## லேசர் கதிர்களை பாய்ச்சு யானைகளை குழப்ப முயற்சியா?



பௌத்த ஊர்வலங்களை சீர்குலைக்கும் மற்றும் அவமதிக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டம் பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தலதா பெரஹெராவிற்கு எதிராக கூட சமூக ஊடக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சன்ன ஜயசுமண தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தலதா பெரஹெராவில் பயணிக்கும் யானைகளை சங்கடப்படுத்தும் வகையில் சில யானைகளுக்கு லேசர் கதிர்கள் பாய்ச்சப்பட்டதாகும். பயிர்களை சேதப்படுத்தும் யானைகளை விரட்டுவதற்கு பயன்படுத்தப்படும் லேசர் கதிர்களை வெளியிடும் சிறிய கருவிகள் ஊர்வலத்திற்கு சில வாரங்களுக்கு முன்பு விற்பனை செய்யப்பட்டதாகவும் அறிய முடிகின்றது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்இ அதிக சக்தி வாய்ந்த லேசர் கதிர்களை வெளியிடும் கருவிகள் இலங்கைக்கு உரிய முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாஇ அவற்றை யார் இலங்கைக்கு இறக்குமதி செய்தது என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறும் பேராசிரியர் சன்ன ஜயசுமண பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றார்.

## அமைச்சரவை அனுமதித்ததும் கொடுப்பனவு அதிகரிக்கும்

கொழும்பில் திங்கட்கிழமை (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திங்கள் (28) மற்றும் செவ்வாய்க்கிழமை (29) கடமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர்மலைக்கு கள விஜயம்

தற்போது குறித்த பகுதியில் தமிழ் மக்கள் வாழ்ந்த பூர்வீக காணிகள் வயல் நிலங்கள் உள்ளடங்களாக மேலும் 306 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் அபகரிப்பதற்காக எல்லை கற்களை போட்டுள்ளது

இவ்வாறான நிலையில் மக்கள் தங்களது காணிகளை மீட்டுத் தருமாறு தொடர்ச்சியாக கோரிவந்த நிலையில் கடந்த ஒகஸ்ட் 16 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற திணைக்களங்களால் அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போது குறித்த பகுதியை நேரடியாக விஜயம் செய்து இது தொடர்பில் முடிவெடுப்பது என தீர்மானிக்கப்பட்டிருந்தது

அதற்கமைய திங்கட்கிழமை (28) குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் கிராம மக்கள் சென்று நேரடியாக குறித்த காணிகளை பார்வையிட்டிருந்தனர்

இருப்பினும் குறித்த காணிகளில் விடுவிக்க கூடிய காணிகள் தொடர்பில் எந்தவிதமான சாதகமான பதில்களும் எட்டப்படாத நிலையில் இன்றைய அவதானிப்புகளின் அடிப்படையில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தி அதனூடாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அந்த அங்கு தீர்மானிக்கப்பட்டது.

## தொழிலாளர் நிதிகளை பயன்படுத்த வேண்டாம்

சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் வரி உயர்வுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புப் பொதிக்கு எதிரான பதாகைகளை ஏந்தியபடி போராட்டம் நடத்தப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக தொழிலாளர் நிதியை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது என்று தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் போராட்டக்காரர்கள் கோரினர்.

முன்னிலை சோசலிச கட்சியுடன் இணைந்த தொழிற்சங்கங்கள், இலங்கை ஆசிரியர் சங்கம், கூட்டு ஆசிரியர் சேவை சங்கம் மற்றும் அரச பல்கலைக்கழகங்களுடன் இணைந்த கல்விசாரா ஊழியர் சங்கங்கள் உள்ளிட்ட பல அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டன.

ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு, திங்கட்கிழமை (28) காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு வளாகம் மற்றும் கொழும்பில் உள்ள மத்திய வங்கி ஆகியவற்றுக்குள் தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 24 நபர்கள் நுழைய தடை விதித்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (28) உத்தரவு பிறப்பித்தது.

தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் துமிந்த நாகமுவ, ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஹிருணிகா பிரேமச்சந்திர, சுதந்திர மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சரித்த ஹேரத், வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட 24 பேருக்கு கொழும்பின் சில பகுதிகள் மற்றும் பல வீதிகளுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டது

ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டங்களை பறக்கவிட தடை

விமானப் போக்குவரத்துச் சட்டத்தின்படி, விமான நிலையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர்களுக்குள் உள்ள பகுதியில் 300 அடி அல்லது அதற்கு மேல் காற்றில் பட்டங்களை பறக்கவிடுவதும், ட்ரோன்களை பறக்கவிடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலீடுகள் குறித்து உஷாராக இருங்கள்

இவ்வாறான திட்டங்களில் ஈடுபடுவதனூடாக பொதுமக்கள் பாடுபட்டு உழைத்த பணத்தை இழக்கலாம் என்பதனால் அத்தகைய திட்டங்களில் ஈடுபட வேண்டாம் என்றும் முதலிட வேண்டாம் என்றும் இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அவை சட்டபூர்வமான திட்டங்கள் என்பதனை நியாயப்படுத்தும் முயற்சியொன்றாக கீழே குறிப்பிடப்பட்டவை போன்ற சில விடயங்களைக் குறிப்பிட்டு இத்திட்டங்களில் முதலிடுமாறு தவறாக வழிநடத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

“இத்திட்டமானது தொடர்புடைய வரிகளை அரசாங்கத்திற்குச் செலுத்துகின்றது.

நிதியங்களை மீளப்பெறும் பொருட்டு இத்திட்டத்தில் பங்கேற்பவர்கள் தமது நிதியங்களிலிருந்து தனிப்பட்ட வருமான வரியை இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டும், இன்றேல் அவர்களது நிதியங்கள் இலங்கை மத்திய வங்கியினால் முடக்கப்படும்.

இத்திட்டம் இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது.

மேற்குறித்த கூற்றுக்களை இலங்கை மத்திய வங்கி முழுமையாக நிராகரிப்பதுடன் இக்கூற்றுக்களில் உண்மையேதுமில்லை என பொதுமக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் அட்டவணை இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்திலும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் வலைத்தளத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது”

இவ்வகையான திட்டங்கள் பற்றி அவதானமாகவும் விழிப்பாகவும் இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

## காலி சிறைச்சாலை கட்டுப்பாடு தளர்வு

நோய் தொற்று தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினாலேயே மேற்குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைதிகளிடையே பற்றீரியா தொற்று பரவியமையினால் பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக கடந்த சில நாட்களில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது.

காலி சிறைச்சாலையில் இரு கைதிகளை பலிகொண்ட சுகவீனம் கண்டறியப்பட்டதை அடுத்து, இரண்டு வாரங்களுக்கு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதில்லை என அதிகாரிகள் தீர்மானித்தனர்.

அதற்கிணங்க, கைதிகளை வெளியில் அழைத்துச் செல்லும் நடவடிக்கை தொடர்ந்தும் தவிர்க்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலி சிறைச்சாலையில் கைதிகளிடையே காய்ச்சல் மற்றும் தோல் தொடர்பான பற்றீரியா தொற்று பரவியமையினால் 2 கைதிகள் உயிரிழந்ததுடன், மேலும் 9 பேர் சுகயீனமடைந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நடனமாடிய இருவர் உயிரிழந்தனர்

ஹொரண, கோனாபொல பிரதேசத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் நடனமாடிக் கொண்டிருந்த 25 வயதான யுவதியொருவர் திடீரென சுகயீனமடைந்து உயிரிழந்துள்ளளார்.

ஹொரண பதுவிட்ட பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்த யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நடனமாடிக் கொண்டிருந்த அவர், திடீரென சுகயீனமடைந்து ஹொரணை பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அவரது மரணத்துக்குக் காரணம் இதய செயலிழப்பு என்றும், உணவுத் துகள்கள் மூச்சுக்குழாயில் அடைப்பு ஏற்படுத்தியதால் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டாகவும் ஹொரணை ஆதார வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி டொக்டர்.பனித செனவிரத்ன நடத்திய பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

இதேவேளை, தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பழைய மாணவர் ஒன்று கூடலில் நடனமாடிக் கொண்டிருந்தவரும் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை (26) தெல்லிப்பழை பகுதியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற ஒன்று கூடலலில், மல்லாகம் பகுதியை சொந்த இடமாக கொண்டவரும் , தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வருபவருமான நாகராஜா சசிதரன் (வயது 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதன் போது பாடல் ஒன்றுக்கு நடனமாடிக்கொண்டு இருந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்,

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார்

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், ஓட்டோவில் பயணித்த ஒருவர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவித்த வெல்லம்பிட்டிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 63 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் இந்த துப்பாக்கிச்சூட்டில் 39 பேர் பலியாகியுள்ளடன், மேலும் 29 பேர் காயம் அடைந்துள்ளனர்.

மேலும் 6 சூட்டு சம்பவங்களில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கவும்

இதுவிடயமாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் திங்கட்கிழமை (28) வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காணியற்ற நிலையில் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக, தாங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் என்னால் தொடர் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவை தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் மேற்படி காணிகள் தென்னிலங்கையின் தொழிலதிபர்களுக்கும், எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களைச் சுரண்டும் நோக்கோடு இயங்கக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கும் பகுதி பகுதியாகக் கூறுபோடப்படுவதை, கையாலாகாத்தனத்தோடு பார்த்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தர்மக்கேணிப் பகுதியிலுள்ள 120 ஏக்கர் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு காணி, புத்தளத்தைத் தளமாகக் கொண்ட ஓர் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு, அக்காணியின் துப்புரவுப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அறியமுடிகிறது.

போரினாலும், இடப்பெயர்வுகளாலும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு இந்த மண்ணிலே மீளவும் குடியேறி, தமக்கென்றொரு நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு சொந்தக் காணியற்ற நிலையில் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும், காணிகளிலும் வாழவேண்டிய அவலநிலைக்கு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்க்கதியற்றிருக்கத்தக்கதாக, அரச காணிகளை தனவந்தர்களுக்கும், இந்த மாகாணத்தோடு எந்தத் தொடர்புகளுமற்றவர்களுக்கும் தாரைவார்த்துக் கொடுப்பதென்பது, அல்லலுறும் எமது மக்களுக்குச் செய்யப்படுகின்ற துரோகச்செயலாகவே அமையும் என்பதில் தாங்களும் கரிசனம் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

## திருமலையில் பௌத்த பிக்குகள் வீதி மறியல்

குறித்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஏ6 பிரதான வீதியை வழிமறித்து கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிலையில் இது தொடர்பாகவும் பேசப்பட்டது.

குறித்த பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிராக தமிழ் மக்களினால் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியினால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையின் கட்டுமானங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே இதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

காலாகாலமாக தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிக்குள் விகாரை அமைத்தால் அது இன முறுகலை ஏற்படுத்தும் என்ற வகையிலும், இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்ற வகையிலும் தமிழ் மக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## விகாரை அமைக்க அனுமதி மறுப்பு

திருக்கோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு சமூகமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறானதொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என்று ஆளுநர் தெரிவித்தார்.

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப்பணிகளும் முன்னெடுக்க முடியாது என ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

# யாழிலும் தெரேசியாவிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்







உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் மற்றும் மலையகத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.


யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் திங்கட்கிழமை (28) மதிய 12 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை, பொகவந்தலாவ தெரேசியா தோட்டப் பகுதியில் திங்கட்கிழமை (28) மதியம் 12.00 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று தொழிலாளர்களினால் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டமானது தெரேசியா தோட்ட காரியாலயத்திற்கு அருகாமையில் இடம்பெற்றது.

அமைச்சரவையில் 2023 ஜூலை 01ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பு.கஜிந்தன், எஸ்.சதீஸ்











பெருந்தோட்ட சமூகத்திற்கான காணி உரிமை பெற்றுக்கொடுத்தல்

# “எமது கோரிக்கையை ஏற்றனர்”

“பெருந்தோட்ட சமூகத்திற்கான காணி உரிமை பெற்றுக்கொடுத்தல் எனும் அடிப்படையில் அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.” என கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

கடந்த வாரம் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் ராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுடன் பெருந்தோட்ட அமைச்சில் தமிழ் முற்போக்கு கூட்டணி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டது.

இக்கலந்துரையாடலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் வேலு சாமி ராதாகிருஷ்ணனும் பங்கேற்றிருந்தார். இதன் போது மலையக பெருந்தோட்ட மக்களின் காணியுரிமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அதன் போது பெருந்தோட்ட சமூகத்திற்கான காணி உரிமை பெற்றுக்கொடுத்தல் எனும் அடிப்படையில் அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டங்களில் வாழுகின்ற மக்களுக்கு காணி உரிமையுடன் தனி வீடுகளை அமைப்பதற்கான பல முயற்சிகள் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அவை ஒரு முழுமையான தீர்வை பெற்றுக்கொடுத்ததாக இல்லை. இதற்கு முன் கொண்டுவரப்பட்ட அமைச்சரவை பத்திரங்கள் பல குறைப்பாடுகளுடனே காணப்படுகின்றன.

குறிப்பாக தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கான காணி வழங்கல் என்பதே பிரதானமானதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே பெருந்தோட்டங்களில் வாழுகின்ற தற்போது தோட்டங்களில் வேலை செய்யாதவர்களுக்கு காணி உரித்தை பெற முடியாது போயுள்ளது. தற்போது பெருந்தோட்டங்களில் வாழுகின்ற குடும்பங்களில் ஒரு சிறு எண்ணிக்கையானவர்களே தோட்ட தொழிலாளர்களாக உள்ளனர்.



பெருமளவானவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இல்லை. இச் சூழலில் வேலை செய்யும் தொழிலாளருக்கான மற்றும் தொழில் செய்யாதவருக்கான எனும் அடிப்படையில் மீண்டும் ஓர் அமைச்சரவை பத்திரம் முன்வைப்பதில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. எனவே, பெருந்தோட்டத்தில் வாழுகின்ற சகல குடும்பங்களுக்கும் காணி உரிமையை பெறக்கூடிய வகையில் பெருந்தோட்ட சமூகத்திற்கான காணி உரிமை வழங்கள் என அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட வேண்டும் என விளக்கமளித்தோம்.

அதனை அமைச்சர் உட்பட உயர்மட்ட அதிகாரிகளும் முழுமையாக ஏற்றுக்கொண்டனர். அதற்கமைய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# பணமோசடி செய்தவரை விடுவித்ததாக பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

■ க. அகரன்

இந்தியாவுக்கு சுற்றுலா செல்வதாக கூறி பணமோசடி செய்த நபரை மக்கள் பிடித்து கொடுத்தும், வவுனியா பொலிஸார் அந்நபரை விடுவித்துள்ளதாக குற்றஞ்சாட்டி, பாதிக்கப்பட்டவர்களால் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது திங்கட்கிழமை (28) மதியம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கண்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் இந்தியாவுக்கு பௌத்தர்களை யாத்திரையாக அழைத்து செல்வதாக தெரிவித்து வவுனியா மற்றும் மதவாச்சி ஆகிய பகுதிகளில் 20 இற்கும் மேற்பட்டவர்களிடம் பணம் பெற்றுள்ளார்.

நபர் ஒருவரிடம் இருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வீதம் பணம் மற்றும் அவர்களது கடவுச்சீட்டு, அடையாள அட்டை போட்டோ பிரதி உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்ற நபர் யாத்திரைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. மக்களிடம் பணம் பெற்ற பின் மக்களுடன் தொடர்பில்லாது நடமாடியுள்ளார்.

இதனால், அவரது நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பணம் செலுத்தியோர், மதவாச்சி பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். எனினும் சம்பந்தப்பட்டவர் பொலிஸ் நிலையம் செல்லாது தலைமறைவாகியிருந்தார்.

வவுனியா இரட்டைக் கொலை

# பிரதான சந்தேக நபரின் சகோதரன் மீது தாக்குதல்



வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டதில் அவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீதே சனிக்கிழமை (26) இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வசித்து வரும் தவசிகுளம் பகுதியில் வைத்து இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தில் பிரதான சந்தேக நபரின் சகோதரரான 37 வயதுடைய நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதசாரி கடவையில்க டந்த பாதசாரி பலி

தலவாக்கலை  நுவரெலியா வீதியில் நானுஓயா ரதெல்ல பிரதேசத்தில் பாதசாரி கடவையில், (வெள்ளைக் கோட்டில்) வீதியைக் கடந்தவர் லொறி மோதியில் மரணமடைந்துள்ளார் என்று நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், திங்கட்கிழமை (28) பிற்பகல் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ரதெல்ல, சர்செட் தோட்டத்தின் லாண்டேல் பிரிவில் வசித்து வந்த ராஜு கிருஷ்ணகுமார் (33) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

பாதசாரி கடவையில் கடந்த இவரை, அதிவேகமாக வந்த லொறி மோதித்தள்ளியுள்ளது. படுகாயமடைந்த நிலையில், அதே லொறியில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்த நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

சென்ஜோன் டிலரி விவகாரங்கள்

# ஆசிரியர்கள் வேண்டாமென பெற்றோர் ஆர்ப்பாட்டம்



சென். ஜோன்டிலரி தமிழ் வித்தியாலயத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்யுமாறு கோரி கடிதமொன்றை பெற்றோர்கள் பாடசாலையின் அதிபரிடம் திங்கட்கிழமை (28) கையளித்தனர்.

அதனை செய்தியாக சேகரிக்க சென்ற ஊடகவியலாளருக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது. இது தொடர்பில் இலங்கை பொலிஸ் தலைமையகத்தில், நிகழ்நிலை ( ஒன்லைன்) ஊடாக முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹட்டன் கல்வி வலயம் கோட்டம் இரண்டிற்கு உற்பட்ட நோர்வூட் சென்ஜோன்டிலரி பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் 8 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, ஹட்டன் நீதவான் நீதிமன்றம் உத்தரவின் பேரில், எதிர்வரும் 4ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தரம் 05 மாணவர்களுக்கு கடந்த 22ம் திகதி மேலதிக வகுப்பினை நடாத்திக் கொண்டிருந்த வேலை குறித்த ஆசிரியர் நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

8 வயதான மாணவி சுகயீனம் அடைந்த நிலையில், மாணவியின் பெற்றோர் டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் மகளை அனுமதித்தனர்

வைத்தியசாலையில் அனுமதித்த சிறுமியை பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்தியர்கள் அச்சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உற்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையினூடாக நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த சம்பவம் 06 மாதங்களுக்கு முன்பு இடம்பெற்றதாகவும் 8 வயது மாணவி கடந்த 03 மாதத்திற்கு தரம் 04 வகுப்பிற்கு டிக்கோயா பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை அதே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்விற்காக 13 வயதுடைய மாணவன் ஒருவனை இம்மாதம் 21ம் திகதி அழைத்துச் சென்ற வேளை குறித்த மாணவனை காணவில்லை என நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் சிறுவனின் பெற்றோர் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்திருந்தனர்.

இதனையடுத்து அந்த ஆசிரியர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடந்த 23ம் திகதி ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமலிருக்க கல்வி அமைச்சர் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இணைந்து இந்த ஆசிரியர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்திய பெற்றோர், சகல ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 21 போலி ஆவணங்கள்: நுரளையில் ஜோடி கைது

போலி ஆவணங்களை தயாரித்து விநியோகித்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், நுவரெலியாவில் வைத்து இளைஞனும் யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான ஆவணங்கள் பலவற்றை தயாரித்துக்கொண்டு ஒரு ஜோடி காரொன்றில் நுவரெலியா நகரத்துக்கு வருகைதருவவதாக, ஞாயிற்றுக்கிழமை (27) பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்பிரகாரம் திடீர் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகத்துகிடமான காரை நிறுத்தி சோதனையிட்டனர். அதில் பயணித்த இருவரையும் இறக்கி விசாரணைக்கு உட்படுத்தினர்.

அப்போது போலியாக தயாரிக்கப்பட்ட வாகன பதிவு சான்றிதழ்-03, வருமான வரி ஆவணம்-03, காப்புறுதி சான்றிதழ்-03, நிதி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தவணைக்கட்டணம் கட்டி முடிக்கப்பட்டமைக்கான ஆவணம்-03, வாகனத்தை ஒப்படைப்பதற்கு எவ்விதமான எதிர்ப்பு இல்லையென அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்கள்-03, வாகன இலக்க தகடு இல்லையென பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பிலான 3 பிரதிகள், தேசிய அடையாள அட்டைகள்-03, தற்காலிக வாகன அத்தாட்சி பத்திரம் ஆகியனவும் வாகனத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 27 வயதான இளைஞன், நாகுளுகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், 21 வயதான யுவதி, ஹிகுரான்கொட பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.


இவ்விருவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், முச்சக்கரவண்டி பதிவு புத்தகத்தை தயாரித்து தருவதாக கூறி பேராதனை பொலிஸ் பிரிவில் வசிக்கும் நபர் ஒருவரிடமிருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மோசடி செய்துள்ளமை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடி தொடர்பில் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘சிம்பா’ வை மக்கள் பார்க்கலாம்

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் புதிதாக இணைந்துள்ள பிறந்து 5 வாரங்களான ‘சிம்பா’ என்ற சிங்கக்குட்டியை பொதுமக்கள் இப்போது பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தினமும் காலை 9.30 முதல் 10.30 வரையும் மதியம் 1.30 முதல் 3.30 வரையும் சிம்பாவை பிரதான உணவகத்தின் முன் பொதுமக்கள் காண முடியுமென தேசிய விலங்கியல் பூங்கா திணைக்கள பணிப்பாளர் கலாநிதி திலக் ப்ரேமகாந்த தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் சண்டி மற்றும் மீராவுக்கு பிறந்த சிம்பா, பிரசவத்தின் பின் தாயால் நிராகிக்கப்பட்டது. அதன் பின்னர் தெஹிவளை பூங்காவிற்கு கொண்டுவரப்பட்ட சிம்பா கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பாளர்களின் கண்காணிப்பின் கீழ் வளர்ந்து வருகிறது.



# வறட்சிக்கு நீர் வார்த்து; வறண்டோருக்கு நிவாரணம் வழங்குக

இயற்கையின் மீது மனிதன் ஆட்கொண்ட, ஆட்கொண்டிருக்கும் நிலைமையால் ஏற்பட்டிருக்கும் இயற்கையின் கோரத்தால், மனிதர்கள் தண்டனையை அனுபவித்து கொண்டிருக்கின்றனர். நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சியான காலநிலை, இன்னும் பல நாட்களுக்கு நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களத்தால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சூரியனும் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இதனால் நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகமாக காணப்படுகின்றது. இந்த நிலைமை எதிர்வரும் 07 ஆம் திகதி வரை நீடிக்குமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்த 10 நாட்களில் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் அதிகளவில் நீராகாரங்களை எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நகரமயமாக்கலின் பின், பெரும்பாலான காடுகளை மனிதர்கள் அபகரித்துக் கொண்டனர், பெறுமதிமிக்க மரங்களை வெட்டி எடுத்துக் கொண்டனர். காடுகளைச் சூறையாடியமையால், இயற்கையின் கோரத்தாண்டவத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலை பெரியவர்களை மட்டுமன்றி, குழந்தைகளுக்கும் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றது. உடல்களில் சிறுசிறு கொப்புளங்கள் தோற்றுகின்றன. ஒருவகையான எரிச்சல் ஏற்பட்டுள்ளது. சொறிந்து கொண்டே இருக்கவேண்டிய நிலைமையும் உள்ளன. ஆகையால், வெயிலில் இருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ளும் நடவடிக்கையையே முன்னெடுக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு நீர்ச்சத்து குறையாமல் இருக்க இயற்கையான திரவ உணவுகளை வழங்குமாறும், வழமையை விட அதிகமாக தண்ணீர் வழங்க வேண்டும் என்றும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

சில குழந்தைகள் காரணமின்றி அழலாம், சில குழந்தைகளுக்கு தலைவலி, வாந்தி, சில குழந்தைகளுக்கு தூக்கமின்மை, பசியின்மை போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். மேலும் காய்ச்சல் இல்லாவிட்டாலும், அதிக உடல் வெப்பநிலை மற்றும் வியர்வை காரணமாக இந்த அறிகுறிகள் ஏற்படலாம் அவை தொடர்பில் அச்சம் கொள்ளாது, நீர் ஆகாரங்களை வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் பிரதேசங்களில் சுத்தமான குடிநீரை மட்டுமே பருகக் கொடுக்க வேண்டும் இல்லையேல், வாந்தி, வயிற்றோட்டம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகமாக காணப்படுகின்றன என வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

நீர்நிலைகளில் போதியளவான நீர் இன்மையால், விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் வரண்டுவிட்டன. மறுபுறத்தில் பற்றைக் காடுகளுக்கு தீ வைத்து கொளுத்தும் நாசகார செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றினால், மனிதர்களே பெருமளவில் பாதிக்கப்படுவர் என்பது மனிதர்களுக்கே புரியாத புதிராக இருக்கின்றது.

காடுகளும் பற்றைக்காடுகளும் காய்ந்துள்ளமையால், விரைவில் தீப்பற்றிக்கொள்ளும். ஆகையால், தீ மூட்டும் நாசகார செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் .

நீண்ட நாட்களாக நிலவும் வறட்சியால் விளைநிலங்கள் வறண்டுவிட்டன. அவற்றுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க உரிய தரப்பினர் முன்வரவேண்டும். விலங்களுக்கு நீரை வார்ப்பதற்கும் வழிசமைக்க வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# கட்டுப்படுத்தப்படாத இன, மத வாதங்கள்

மொஹமட் பாதுஷா

இலங்கை அரசியலில் ஒரு புதுவித காட்சி ஓடத் தொடங்கியுள்ளதாக தெரிகின்றது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ஆதிக்க அரசியல் போட்டிகளுக்கு மத்தியில், இனவாதம் மற்றும் மதவாத குழப்பங்களை முன்னிறுத்திய காட்சியொன்று அடுத்த தேர்தல் வரையும் நீட்சி கொள்வதற்கான நிகழ்தகவுகள் தெரிகின்றன.

உலக நாடுகளில் உள்ள பெரிய கட்சிகளும் ஆட்சியாளர்களும் அரசியல் செய்வதற்காக சில 'கருவிகளை' வைத்திருக்கின்றார்கள். இன்னுமொரு நாட்டின் மீதான படையெடுப்பு, தீவிரவாதத்தை ஒழித்தல், ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்தல், இன ஒடுக்குமுறை, அயல் தேசங்களை ஆக்கிரமித்தல், உள்நாட்டுக் கலவரங்கள்... என பலதரப்பட்ட காரணங்களை முன்னிறுத்தியே பல நாடுகளின் அரசியல் பிழைப்பு நடந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில், இலங்கையில் இனவாதமும் மதவாதமும் இந்த இடத்தைப் பிடித்துள்ளன. பயங்கரவாதமும் பிரிவினைவாதமும் பிராந்தியவாதமும் கூட பல நேரங்களில் நாட்டு நிலைமைகளை புரட்டிப்போடும் அளவுக்கு செல்வாக்கு செலுத்தி வந்திருப்பதைக் காண்கின்றோம்.

பல்லின மக்களை ஒற்றுமைப்படுத்தி, அதன் மூலம் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி, ஊழலற்ற, நீதமான ஆட்சியொன்றைச் செய்வதன் ஊடாக நாட்டு மக்களை திருப்திப்படுத்தி அதன் ஊடாக அரசியல் செய்வதற்கு வக்கற்ற பெருந்தேசியக் கட்சிகள், இனம் சார்ந்த கருவிகளை தமது கைகளில் எடுத்தாடுகின்றன.

அதற்காக தமிழ்க் கட்சிகளோ முஸ்லிம் கட்சிகளோ செய்கின்ற அரசியலையும் அவர்களது பிரசாரங்களையும் முற்றுமுழுதாகச் சரி என்று சொல்லிவிட முடியாது.

பெருந்தேசியத்தை எதிர்த்தாடும் தோரணையில் சில தமிழ் அரசியல்வாதிகள் வெளியிடுகின்ற 'போராட்டம் வெடிக்கும்', 'ஆயுதம் ஏந்துவோம்' என்ற பாணியிலான அறிக்கைகளும், முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் சிங்கள அரசியல்வாதிகளை இனவாதிகளாக சித்திரிக்க பயன்படுத்துகின்ற பிரசார உத்திகளும் இதற்கு உதாரணங்களாகும்.

இலங்கையில் பொதுவாக பிரதானமாக இரண்டு விதமான இனவாத முன்னெடுப்புக்கள் உள்ளன. ஒன்று, வெளிப்படையான, பகிரங்கமான இனவாத செயற்பாடுகளும் அதற்கு ஆட்சியாளர்கள் அனுசரணை வழங்குவதுமாகும்.

இரண்டாவது, மறைமுகமான மென்-இனவாத போக்குகள். அதாவது, வெளிப்படையாக நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டு, திரைக்குப் பின்னால் நுணுக்கமான இனவாத நெருக்கடிகளுக்கு தூர இருந்து ஆசீர்வாதம் வழங்கும் போக்கு எனலாம்.

பெருந்தேசியம் குறிப்பாக ஆட்சியாளர்கள் எல்லாக் காலத்திலும் தமிழர்களுடனும் முஸ்லிம்களுடனும் சம உறவைப் பேணியதாக குறிப்பிடுவது கடினமாகும். பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தமிழர்களை அரவணைத்துக் கொண்டும், இன்னுமொரு காலத்தில் முஸ்லிம்களுடன் உறவாடிக் கொண்டும் மற்றைய இனத்தை கையாண்டதை வரலாறு நெடுகிலும் கண்டு வந்திருக்கின்றோம்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை மக்களின் தோழனாகவே எப்போதும் பார்க்கப்பட்டு வந்திருக்கின்றார். வெளிப்படையாக அவர் தமிழர்களையோ, முஸ்லிம்களையோ பகைத்துக் கொள்வதில்லை. இது அவரது அரசியல் அறிவும் பண்பும் மட்டுமல்ல மாறாக, அவ்வாறு செய்வதன் பின்விளைவுகள் குறித்த ராஜதந்திர முன்னுணர்வும் எனலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருந்த போதும் சிறுபான்மைச் சமூகங்களை நோக்கி ஒரு நேசக்கரம் நீட்டப்பட்டன. இனப் பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகள் இதில் முக்கியமானவை.

சமகாலத்தில், இவர்கள் ஆட்சியில் இருந்தபோது சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக பல சம்பவங்கள் நடந்தேறின என்பதை மறந்து விடக் கூடாது. 1990 ஐ.தே.கட்சி அதிகாரத்தில் இருந்தபோதே முஸ்லிம்கள் மீதான தமிழ் ஆயுதக் குழுக்களின் அட்டூழியங்கள் நடந்தேறின. ரணில் பிரதமராக இருந்த போதே அம்பாறை மற்றும் திகண கலவரங்கள் இனிதே நடந்து முடிந்தன.

ஆகவே, இலங்கையில் இன முரண்பாடு என்பது எல்லாக் காலத்திலும் எல்லோருடைய ஆட்சியிலும் இருந்து வந்திருக்கின்றது. அது அவர்களுக்கு பெரிய முதலீடாகும். ஆனால், ராஜபக்சக்களும் விக்கிரமசிங்கக்களும் சிறிசேனக்களும் பண்டாரநாயக்களும் பிரேதமாசக்களும் அதை வெவ்வேறு விதமாக கையாண்டனர் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தப் புரிதலோடும் கடந்தகால அனுபவத்தோடும் நாட்டில் தற்போது நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கின்ற போது, இன்னுமொரு இனவாத, மதவாத நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் பலமாக எழுகின்றது.

ஒரு குறிப்பிட்ட ஆட்சியாளர்களின் காலத்தில் வெளிப்படையான (வன்) இனவாதமும், இன்னும் சிலர் அதிகாரத்தில் உள்ள போது (மென்) இனவாதமும் தலைதூக்குவது வாடிக்கையென்றால், இரண்டும் 'கலவையான' ஒரு போக்கு இப்போது மேலெழுகின்றதா என்று சிந்திக்க தோன்றுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கின்றார். அவர் சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் விடயத்தில் கரிசனை காட்டும் ஆட்சியாளராகவே தன்னை முன்னிலைப்படுத்துகின்றார். இதுவே அவரது வழக்கமான பாணியும் கூட. இது சந்தோசமே.

தமிழர்களின் கோரிக்கைக்கு அமைவாக 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி கூடுமானவரை அதிகாரப் பகிர்வை வழங்கப் போவதாக அறிவித்துள்ள சமகாலத்தில், முஸ்லிம்கள் மற்றும் மலையக மக்களின் அபிலாஷைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்ற அறிவிப்பையும் விடுத்துள்ளார்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க உண்மையில் பொதுஜனப் பெரமுண எனும் ராஜபக்சக்களின் கட்சியின் முட்டு உதவியிலேயே ஜனாதிபதி ஆசனத்தில் இருக்கின்றார். இந்த பின்னணியில் புரிந்துகொள்ள முடியாத ஒரு கலவையான இனவாத நெருக்கடிகளா நாட்டில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற சந்தேகம் எழுகின்றது.

இனப் பிரச்சினைக்கு தீர்வைக் கோரி வருகின்ற தமிழ் தரப்பினை திருப்திப்படுத்தும் முகமாக 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான முன்மொழிவுகளை ஜனாதிபதி தரப்பு கோரியுள்ளது. அதிகாரப் பகிர்வை வழங்க தயாராக இருப்பதான பிம்பத்தை ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்திற்கு வெளிக்காட்டி நிற்கின்றார்.

ஆனால் ஆளும் கட்சிக்குள் இருக்கின்றவர்களே இதற்கு எதிராக கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஒட்டுமொத்தமாக 13 இனை நீக்க வேண்டும் என்று கூறுகின்றனர். சிங்கள மக்கள் இதனால் சற்று குழப்பமடைந்துள்ளதாகவே தெரிகின்றது.

அதேநேரம், ஏற்கனவே வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஏகப்பட்ட காணிப் பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக முஸ்லிம்களுக்கு சனத் தொகைப் பரம்பலின் கால்வாசி அளவுக்குக் கூட காணி உரிமை இல்லை என்பதுடன் இரண்டு இலட்சம் ஹெக்டேயர் நிலங்கள் பற்றிய பிரச்சினைகளும் அவர்களுக்கு உள்ளன.

இது இவ்வாறிருக்க, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதுமட்டுமன்றி, விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள மக்களே வாழும் இடங்களில் அதிகாரத் தோரணையோடு பௌத்த வழிபாட்டுத்தலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதற்கிடையில், தொல்பொருள்களை பாதுகாத்தல் என்ற தோரணையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன, மத முரண்பாட்டின் உச்சப் புள்ளியாக உருவெடுத்திருப்பதைக் காண்கின்றோம். குருந்தூர்மலை விவகாரம் இதற்கு ஆகப் பிந்திய உதாரணமாகும்.

நீதிபதியை விமர்சித்த சரத் வீரசேகர, தமிழர்கள் மீது வஞ்சத்தை கொட்டும் மேர்வின் சில்வா மற்றும் உதய கம்மன்பில போன்றோரின் கருத்துக்கள் மிக மோசமான தொடர் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் ஆட்சியாளர்கள் இவற்றை கட்டுப்படுத்தியதாக தெரியவில்லை.

மறுபுறத்தில், சிங்கள அரசியல்வாதிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சில தமிழ் அரசியல்வாதிகள் தெரிவிக்கின்ற ஆக்ரோசமான கருத்துக்களும் சிங்கள சமூகத்தின் மத்தியில் அதேவிதமான இனவாத கருத்துக்களாகவே பார்க்கப்படும் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தப் பின்னணியிலேயே, இலங்கையில் இன மோதல் இடம்பெறலாம் என்றும், வடக்கு, கிழக்கில் இனக் கலவரத்தை ஏற்படுத்த சதித்திட்டம் மேற்கொள்ளப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இனவாத கருத்துக்களுக்கு தொடக்கத்திலேயே முற்றுப்புள்ளி வைத்திருந்தால் நிலைமை இந்தளவுக்கு மோசமாக மாறியிருக்காது.

இவையெல்லாம் தற்செயல் நிகழ்வுகளாக தெரிவில்லை. அத்துடன் இவற்றை சர்வ சாதாரணமாக கருதி, கண்டும் காணாமல் விடவும் முடியாது. சீனா - இந்தியாவின் அதிகாரப் போட்டி உச்சத்தை அடைந்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் இனவாதத்திற்கு தூபமிட இடமளிக்கவும் முடியாது.

ஆயினும் இப்படி, இன மற்றும் மதவாதத்தையும் தொல்பொருள் மையங்களையும் மையமாகக் கொண்டு ஒரு இன முறுகல் வலுப்பெற்று வருகின்ற நிலையில் அரசாங்கம் இவற்றைக் கட்டுப்படுத்தாமல் ஒரு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருவதாகவே தெரிகின்றது.

எனவே, நாட்டில் அரசாங்கத்திற்கோ அல்லது பலமிக்க யாருக்கோ இப்போது அமைதியாக இருக்கின்ற குட்டையை குழப்ப வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்ற ஐயப்பாடு மேலெழத் தொடங்கியுள்ளது. கடந்த காலத்தில் இலங்கையர் பெற்ற அனுபவங்களே இதற்கு காரணமாகும்.

ஆனால் ஒரு விடயத்தை மறந்து விடக் கூடாது,

அயல்நாடான இந்தியா சந்திரனில் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு காலத்தில், அற்ப காரணங்களுக்காக, உள்நோக்கங்களுக்காக மக்களிடையே இனவாதம் வளர்வதை பொறுப்புவாய்ந்தவர்கள் கண்டும்காணாதிருப்பது மிகப் பெரிய அழிவுகளைக் கொண்டு வரும். அதன் பிறகு தலையில் அடித்து ஒப்பாரி வைப்பதில் பயனேதும் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

பிரச்சினைகளும் துன்பங்களும் நிறைந்த இன்றைய காலத்தில்தான், தர்மம் செய்வதன் அவசியம் உணரப்பட வேண்டும்.

எவரையும் கண்டுகொள்ளாமல், முகத்தைத் திருப்பிக்கொள்வது இன்றைய காலத்தில் செய்யும் அநீதியாகும். காலத்துக்குக் காலம் நாடுகளில் வறுமை வருவதுண்டு. இந்த நிலையில், வறிய நாடுகளுக்கு உதவி புரிவது, தர்மப் பணியில் உச்சமானது.

ஆனால், நம்மவர்கள் சண்டை சச்சரவுகளில் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முயலுகின்றார்கள். இந்தக் கஸ்டநிலை மாறும் தன்மை கொண்டது; நிரந்தரமானது இல்லை. நடுத்தர மக்கள் கூட, மிரண்டுபோய் நிற்கின்றார்கள்.

இயற்கையின் மாற்றங்களைக் கண்டு, மலைத்து நிற்காமல் எழுவதே வீரமாகும். பயம் கொண்டு வாழ்வது, உயிர் வாழ்வை அவமதிப்பதாகும். எத்தனை எத்தனை பயங்கரமான அனுபவங்களைக் கண்டிருக்கிறோம்.

பல வருட யுத்தத்தைக் கண்டவர்கள் நாங்கள். எனவே, எதையும் தாங்கும் நிலையை அடைந்தவர்கள்,அச்சங்களுக்குள் புகுந்து கொள்ளமாட்டார்கள். நீதி, தர்மத்தை உயர்த்தும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி பகுதியில் உள்ள பண்டாரமிடுக்கு பகுதியில் சேதமடைந்துள்ள உவநீர் தடுப்பணையை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூனகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி பண்டாரமிடுக்கு பகுதியில் சேதமடைந்து காணப்படுகின்ற உவர்நீர் தடுப்பணையானது சேதமடைந்துள்ளதாகவும் மழைகாலங்களிலும் கடல் நீர் பெருக்கெடுக்கின்ற காலங்களிலும்; விவசாய நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகும் நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ள விவசாயிகள் குறித்த தடுப்பணையை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உவர்நீர் தடுப்பணை அமைக்கப்படாதவிடத்து ஏற்கெனவே விவசாயம் செய்து வரும் பகுதிகளிலும் இவ்வாறு உயர் பாதிப்புகள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ள இவர்கள், குறித்த பகுதியிலே மேலும் ஆயிரம் ஏக்கர் பகுதி நிலம் விவசாயம் செய்யக் கூடியதாக இருப்பதாகவும் அவ்வாறான காணிகளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– சுப்ரமணியம் பாஸ்கரன்



# ஒவ்வோர் உயிரும் விலைமதிப்பற்றது



சயந்தன் அபிசரண்
இரண்டாம் வருடம்
ஊடக கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

தற்கொலை என்பது விருப்பத்துடன் ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்ளும் செயலாகும். மன அழுத்தம்,மனப்பித்து, இருமுனையப் பிறழ்வு, ஆளுமை சிதைவு,குடிப்பழக்கம், குற்ற உணர்வு,இயலாமை, வெட்கம் கடுமையான உடல் வலி,வறுமை போன்ற காரணிகளே ஒருவரை தற்கொலைக்கு தூண்டலாம்.

தற்கொலையை பொறுத்த மட்டில் அது மூன்று வகைப்படும் என எமில் துர்கைம் கூறுகிறார். அதாவது தனது இனத்தின் மீதான ஆழமான பற்று காரணமாக தற்கொலை செய்து கொள்ளல், ஒரு மனிதன் தான் சார்ந்த சமூகத்தில் இருந்து தனிமை படுத்தப்படும்போது தற்கொலை செய்து கொள்ளல்,எதிர்கால வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ளல் போன்றனவாகும்.

உலகளாவிய ரீதியில் தற்கொலை ஒரு நோயாகவே கருதப்படுகின்றது. மேலும் மரணத்திற்கு காரணமாக விளங்கும் பத்தாவது காரணியாக தற்கொலையானது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச கணக்கெடுப்பின்படி ஆண்டொண்டிற்கு 8 லட்சம் பேர் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். அதாவது ஒவ்வொரு 40 வினாடிக்கும் ஒரு உயிர் எனும் அடிப்படையில் தற்கொலை சம்பவங்கள் நிகழ்கின்றன. குறிப்பாக கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளிலே அதிக அளவிலான தற்கொலை சம்பவங்கள் நிகழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. விகிதாசார ரீதியில் அதிக தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. அதாவது ஒரு லட்சம் மக்களில் 28.5 சதவீதமானோர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

மேலும் உலகளாவிய ரீதியில் கடந்த 45 வருடங்களில் தற்கொலையின் சதவீதம் 60 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக 15 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்ட பிரிவினரே தற்கொலைக்கு உள்ளாகின்றனர். கனடாவை பொறுத்தமட்டில் நாளொன்றுக்கு 11 நபர் என்ற அடிப்படையில் வருடத்திற்கு நான்காயிரம் பேர் தற்கொலையால் இறக்கின்றனர். அந்த வகையில் தற்கொலையானது ஒரு பெரிய சமூகப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளமையை அவதானிக்கலாம்.

இந்த வகையில் தற்கொலைக்கான காரணங்களையும் அதை தடுப்பதற்கான முறைகள் பற்றியும் நோக்குவோம்.

தற்கொலைகள் ஒரே ஒரு காரணத்தினால் நிகழ்வது போல தோன்றினாலும், தற்கொலையின் பின்னணியில் பல்வேறு உயிரியல், உளவியல், சமூக காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன.

நவீன உலகில் தொழில்நுட்பத்தின் மீதான அதீத பற்றுதலின் காரணமாக கைபேசிகளையும் கணினிகளையும் நண்பர்களாக பார்க்கின்றோம். சந்தோஷமான தருணங்களை மாத்திரம் சமூக வலைத்தளங்களில் பகிருகின்ற நாம் நமது சுக துக்கங்களை பகிர மறுக்கின்றோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனிதன் மன உளைச்சலுக்கு உள்ளாகி விரக்தி நிலைக்கு ஆளாகுகின்றான். இவ்வாறான விரக்தி நிலையானது மனிதனை மன அழுத்தத்திற்கு இட்டுச் செல்கின்றது. குறிப்பாக 90 சதவீதமான தற்கொலைகள் மன அழுத்தத்தின் விளைவினாலே ஏற்படுகின்றன.

இளம் வயதினரை பொறுத்தமட்டில் குடும்ப பிரச்சனை,காதல் தோல்வி, பரீட்சையில் தோல்வி போன்ற காரணங்களினால் மன அழுத்தத்திற்கு உள்ளாகி தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். தற்கொலை என்ற ஒரு நிமிட எண்ணம் எல்லோருக்கும் உடனே வருவதில்லை. வரும் பிரச்சனைகளை எப்படி கையாள்வது என்று தெரியாமல் குழம்பும் போதும், யாரும் அரவணைக்க இல்லாமல் தனிமையில் வாடுகின்ற போது இம்மாதிரியான முடிவை நோக்கிச் செல்வதற்கு தூண்டப்படுகின்றனர்.

2010 ஆம் ஆண்டு பெங்களூரை சேர்ந்த 18 முதல் 25 க்கு இடைப்பட்ட 436 மாணவர்களிடையே நிகழ்த்தப்பட்ட கணக்கெடுப்பின் போது 15 சதவீதமானோர் தற்கொலை பற்றியே எண்ணத்துடனும் , 9 சதவீதமானோர் தற்கொலைக்கு முயன்று உள்ளமையும் அவதானிக்க முடிந்தது. மேலும் அதில் சிலர் பாலியல் ரீதியாக ஏற்பட்ட துன்புறுத்தலின் காரணமாகவும் தற்கொலைக்கு முயன்று உள்ளனர்.

பெரியவர்களை பொறுத்தவரை தொழில் மற்றும் பணம் சார்ந்த பிரச்சினைகள் தற்கொலைக்கான தூண்டுதல் காரணியாக விளங்குகின்றன. மை நிச்சி டெய்லி நீயுசின் கூற்றுப்படி, நடுத்தர வயதினையுடைய நபர்களுள் முக்கால்வாசிப்பேர் வியாபாரத்தில் ஏற்படுகின்ற தோல்வி,வறுமை, வேலையின்மை போன்ற காரணங்களுக்காக தற்கொலைக்கு முயல்கின்றனர்.

இவற்றைவிட வேலையில் இருந்து ஓய்வு பெறல், நோய்களுக்கு உள்ளாகுதல், பிறரால் ஒதுக்கி வைக்கப்படுதல், விமர்சனங்களுக்கு உள்ளாகுதல், குடும்பத்தவர்களின் புறக்கணிப்பு, தம்மைத் தாமே தாழ்வாக எண்ணுதல், தனிமை விரும்பிகளாக மாறுதல் போன்ற காரணங்களால் மனதளவில் அழுத்தம் ஏற்பட்டு இவ்வாறான முடிவினை நாடுகின்றனர்.

தற்கொலையை தடுப்பதற்கான முயற்சிகள் தனிநபர்,குடும்பம், சமூகம் அடிப்படையில் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. தற்கொலைத் தடுப்பு முறைகளைப் பற்றி நோக்குவோமாயின்...

அவை மூன்று வகைப்படும்

ஒன்று எல்லா மக்களையும் முன்னிறுத்தி எடுக்கப்படும் நடவடிக்கைகள், இரண்டாவது தற்கொலைக்கான இடர் காரணிகள் அதிகமாக இருக்கும் நபர்களை மையப்படுத்தி எடுக்கப்படும் நடவடிக்கைகள், மூன்றாவது ஏற்கனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மீள தற்கொலைக்கு செல்லாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் என்பனவாகும்.

தற்கொலைகளை தடுப்பதில் ஊடகங்கள் ஆக்கபூர்வமாக பங்காற்ற முடியும். குறிப்பாக தற்கொலை தொடர்பான தவறான சிந்தனையை மக்கள் மத்தியில் இருந்து கலைத்தல், தற்கொலை தடுப்பு சேவைகள் பற்றிய தகவல்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற ஊடகங்களின் சமுதாய பொறுப்பின் மூலம் தற்கொலைகளைத் தடுக்கலாம்.

குறிப்பாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தில் முகம் கொடுக்க நேரிடுகின்ற சிக்கல்களை கையாள்வதற்கான பக்குவத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவும் ,மேலும் தற்கொலைகளை ஏற்படுத்துகின்ற வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பத்தை தடுப்பதன் மூலமாகவும் எதிர்காலத்தில் ஏற்படும் தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.

எந்த ஒரு பிரச்சனைக்கும் தற்கொலை தீர்வாகாது,எனும் எண்ணத்தை விதைக்க வேண்டும். இது தவிர்ந்து நபர்களுக்கிடையே மனம் விட்டு உணர்வுகளை பகிர்ந்துக் கொள்வதன் மூலமும் தற்கொலை போன்ற எண்ணத்தை மாற்றியமைக்கலாம். மேலும் வாழ்க்கைப் பற்றிய ஒரு நேரான சிந்தனையை வலுப்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வாழ்க்கையின் யதார்த்தத்தை புரிய வைக்க முயலுதல்.

அத்துடன் உளவளத்துணை வசதிகளை சமூகத்தில் மேம்படுத்தல், தற்கொலை தடுப்புச் சட்டங்களை உருவாக்குதல், கல்வியியற் கூடங்களின் ஊடாக மாணவர்களுக்கு தற்கொலை தொடர்பான விழிப்புணர்வை வழங்குதல், நேர்மறையான வாழ்க்கை மாற்றங்களை ஊக்குவித்து இயற்கை சூழலுடனான இயைபாகத்தை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளின் வாயிலாக தற்கொலை எண்ணத்தினைத் தடுக்கலாம்.

இவ்வாறாக தற்கொலை முற்பாதுகாப்பு நடவடிக்கைகளின் வாயிலாக சமூகத்தில் ஏற்படும் தற்கொலைகளின் எண்ணிக்கையை குறைக்கலாம்.

ஆகவே ஒட்டுமொத்தமாக நோக்கும் போது தற்கொலை என்பது சமூகத்தில் நிலவுகின்ற பாரிய நோயாகவே கருதலாம். அந்த வகையில் தற்கொலை சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக கையாளும் பட்சத்தில் சமூகத்தில் நிலவுகின்ற தற்கொலை எண்ணத்தை கலைத்து தற்கொலை அற்ற ஒரு சிறந்த சமூகத்தை எம்மால் உருவாக்க முடியும். எனவே பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது என கருதி ஒரு உயிர் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் அவல நிலையிலிருந்து பாதுகாப்போம்.



ஜப்பானின் அனுசக்தி நிலைய

# கழிவு நீரை விடுவித்தல்



ச.தனுஷ்கா
யாழ்ப்பாண
பல்பலைக்கழகம்,
ஊடகக்கற்கைகள் துறை

ஜப்பான் நாட்டில் 2011 ஆம் ஆண்டு பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக அதே ஆண்டு மார்ச் 11-ம் திகதி சுனாமி பேரலை ஜப்பானை கடுமையாக தாக்கியது. இதில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர். அக்காலப்பகுதியில் பாரிய பாதிப்பை சந்தித்த புகுஷிமா பகுதியில் அமைந்திருக்கக் கூடிய மிகப்பெரியதும்,உலகத்திலேயே பாதுகாப்பானதுமான புகுஷிமா அணுஉலையில் சுனாமியின் போது கடல்நீர் பெருமளவு ஊடுருவியது. அணு மின்நிலையத்தின் தொழிற்பாட்டிற்குரிய பல மின்சார இயந்திரங்கள் செயலற்றமையால் உலைகளை குளிர்விக்க கூடிய சாதனங்கள் அனைத்தும் செயலிழந்தன. இதனால் அணுஉலையில் வெப்பம் அதிகரித்தது. அதன் விளைவால் ஆறு யூனிட்களில் மூன்று யூனிட்கள் முற்றிலும் சேதமாகியது.அணுஉலையை சுற்றியுள்ள பகுதிகளை கதிர்வீச்சு தாக்கியது.காற்றில் பரவக்கூடிய கதிர்வீச்சினை தடுப்பதற்கும் வெப்பத்தை குறைப்பதற்கும் இலட்சக்கணக்கான லிட்டர் நீரை ஜப்பான் அரசு பயன்படுத்தியது. இவ்விபத்து நிகழ்ந்து 12 ஆண்டுகள் கழிந்தும் கூட அணுஉலையில் கதிர்வீச்சின் தாக்கம் உள்ளது என்று கூறப்படுகிறது. இதனால் புகுஷிமா அணு உலையில் இருக்கக்கூடிய அணுக்கழிவுகளை பாதுகாப்பாக அகற்றியதன் பின்னர் இவ்வணு உலையை முழுமையாக செயலிழக்ககூடிய பணிகளில் டெப்கோ நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ரஷ்யாவில் 1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற செர்னோபில் அணுஉலை விபத்திற்கு பின்னர் உலகில் இரண்டாவது மிகப்பெரிய அணுஉலை விபத்தாக புகுஷிமா அணுஉலை கருதப்படுகிறது. இச்சம்பவத்திற்கு பின்னர் அப்பகுதியில் வாழும் அனைத்து மக்களும் அப்புறப்படுத்தப்பட்டனர். மனிதர்கள் வாழ்வதற்கு தகுதியற்ற இடம் என அறிவிக்கப்பட்டது. குறித்த பிரதேசத்தில் பூக்கும் பூக்கள் மாறுபட்ட வடிவில் பூப்பதாகவும் இதற்கு கதிர்வீச்சுக்களே காரணம் என்று கூறப்பட்டது.மரபுப் பிறழ்ச்சி, மரபணு மற்றும் ஹார்மோன்களில் ஏற்பட்ட மாற்றம் என்பன பூக்களின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் விளைவால் பூக்கள் மாறுபட்ட வடிவத்தில் பூக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். புகுஷிமா அணுஉலை விபத்தால் வெளிப்பட்ட கதிர்வீச்சுக்களின் தாக்கமானது நாடுகளைக் கடந்தும் அதிகமாக உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் விளையக்கூடிய திராட்சைகளில் புகுஷிமா அணுஉலையினுடைய கதிர்வீச்சுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விபத்து இடம்பெற்று பத்து ஆண்டுகள் கடந்தும் கூட புகுஷிமா அணுஉலை கதிர்வீச்சுகளின் தாக்கம் குறையவில்லை. இதற்கிடையில் அணு உலையை முழுமையாக செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதற்கான பணிகள் கடந்த 2022 ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானிய டெப்கோ நிறுவனம் தொடங்கியது.

ஜப்பானின் புகுஷிமா அணு உலை சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் ஜப்பான் கடந்த வியாழனன்று(2023.08.24) திறந்து விட்டுள்ளது. இதனை ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பு ஏற்றுக்கொண்டாலும் அக்கழிவு நீரில் அகற்றப்படாத கதிரியக்கம் எஞ்சியிருக்குமோ என்ற அச்சம் மக்களிடம் காணப்படுகிறது. இதையடுத்து ஜப்பானிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய சீனாவும் தென்கொரியாவும் தடை விதித்துள்ளன. ஹாங்காங்கும் தனது எதிர்ப்பை வெளிப்படையாக தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜப்பானின் கருத்து

சேதமடைந்த புகுஷிமா அணுஉலையின் கதிர்வீச்சினை குறைக்க இதுவரைக்கும் 13 இலட்சம் லிட்டருக்கு அதிகமான நீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பயன்படுத்தப்பட்ட நீரானது கதிர்வீச்சுடன் கலந்து கழிவுநீராக மாறியது. இந்த நீர் சுத்திகரிக்கப்பட்டு அணுஉலைக்கு அருகிலுள்ள தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த ஆண்டு கழிவு நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள அத்தொட்டிகள் நிரம்பக்கூடிய நிலையில் உள்ளதாக டெப்கோ நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.தற்போது புகுஷிமா அணுஉலையின் கழிவுகள் நிறைந்த சுமார் 1,25,000 டொன் கழிவு நீர் முற்றிலுமாக சுத்திகரிக்கப்பட்டு ஆயிரத்திற்கும் அதிகமான தொட்டிகளில் சேகரிக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் பல சுற்றுகள் சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை இனியும் அப்படியே சேமித்து வைத்திருப்பது சரியல்ல என்று வாதிடும் ஜப்பான்,அணுசக்தி நிலையத்தில் உள்ள ஒரு மில்லியன் தொன்கள் அளவான கழிவு நீரை பாதுகாப்பான முறையில் எதிர்வரும் 30 வருட காலப்பகுதியில் சமுத்திரத்தில் பகுதி பகுதியாக விடுவிக்கப்பட உள்ளதாகவும்: இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று கூறுகிறது. பசுபிக் பெருங்கடலில் உள்ள கதிரியக்கத்தின் அளவை தொடர்ந்து கண்காணிக்கவும் வெளிப்படை தன்மையை பராமரிக்கவும் ஜப்பான் அரசு உறுதியளித்துள்ளது.

ஜப்பானின் வாதத்தை பல அறிவியலாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பும் ஜப்பானின் இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதும்,சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் மிகச் சிறியதாகவே அமையும் என அவ்வமைப்பு கூறியுள்ளது.பிற நாடுகளின் அணுஉலை கழிவு நீரில் உள்ள ட்ரிட்டியம் அளவைவிட குறைவாக அனுமதிப்பதாக ஜப்பானிய அரசு கூறுகிறது. மேலும் சர்வதேச பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை பூர்த்தி செய்யும் என்று கூறுகிறது.டெப்கோ நிறுவனம் மற்றும் ஜப்பானிய அரசாங்கம் ஆகியவை இது குறித்து கருத்து தெரிவிக்கையில்; சுற்றுச்சூழலில் இயற்கையாகவே ட்ரிட்டியம் காணப்படுவதாகவும், இதனால் கடலில் அனுமதிக்கப்படும் சிறியளவான ட்ரிட்டியம் பாதுகாப்பானது என வாதிடுகின்றனர்.

## பிற நாடுகளும், விஞ்ஞானிகளும் இத்திட்டத்தை எதிர்ப்பது ஏன்?

ஜப்பானின் புகுஷிமா திட்டத்திற்கு சீனா, தென்கொரியா, ஹொங்காங் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றன. புகுஷிமா அணுஉலை கழிவு நீரை சுத்திகரித்தாலும் அதில் உள்ள ட்ரிட்டியம் மற்றும் கார்பன்-14 ஆகிய கதிரியக்க மூலக்கூறுகள் தற்போது ஆபத்தான அளவுக்கு இருப்பதாகவும் அவற்றை முழுவதுமாக அகற்றக்கூடிய தொழில்நுட்பமானது உலகில் எந்த நாட்டிலும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் குறித்து சர்வதேச அணுசக்தி நிறுவனம், ஜப்பானுக்கு நேரடி ஆய்வுகளை மேற்கொண்டு மதிப்பீடுகளையும் அறிக்கையினையும் சமர்ப்பித்தது. இவை நம்பத்தகுந்த மதிப்பீடுகள் அல்ல என்றும் இத்திட்டம் மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும் சீனா கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகிறது.

இதே வேளை ஜப்பானிலிருந்து சில கடல் உணவுகளுக்கு தடை விதித்திருந்த தென்கொரியா கருத்து தெரிவிக்கையில்:ஜப்பான் இக்கழிவு நீரை வெளியேற்றுவது தொடர்பில் விஞ்ஞான நியமத்தராதரங்களை பின்பற்றுவது சம்பந்தமாக சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறதா இல்லையா என்பதே தற்போது முக்கியமானதாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

ட்ரிட்டியம் தோலில் ஊடுருவ முடியாத அளவுக்கு பலவீனமானது ஆனால் மிக அதிக அளவில் எடுத்துக் கொண்டால் புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கலாம் என கனேடிய அணுசக்தி பாதுகாப்பு ஆணையம் கூறியுள்ளது. “எந்த ஒரு கதிர்வீச்சும் வெளிப்படுத்தப்படும் போது சில ஆரோக்கிய ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்”என்று அமெரிக்க அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புக்கொண்டது.எனவே ஜப்பான் அரசானது இத்திட்டத்தை மேலும் சில பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் பெருங்கடலின் சுற்றுச்சூழல் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை ஆகியவற்றில் இத்திட்டம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்பது பிற நாடுகளின் நிலைப்பாடாகும்.

## சீனாவின் எதிர்வினை என்ன?

2011 ஆம் ஆண்டு புகுஷிமா அணுஉலை விபத்து நேரிட்டதுமே அப்பிராந்தியத்தில் பிடிக்கப்படும் மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம்,சீனா, தென்கொரியா ஆகியவை தடைவிதித்தன. தற்போது புகுஷிமா அணுஉலை கழிவுநீரை திறந்து விடும் ஜப்பானின் நடவடிக்கைக்கு எதிராக சீனா மட்டுமே கடுமையாக எதிர்வினை புரிகிறது.புகுஷிமா பிராந்தியத்திற்கு மட்டுமே இருந்த தடையை ஜப்பான் முழுவதுமாக விரிவாக்கி உள்ளது.ஜப்பானிலிருந்து கடல் உணவு இறக்குமதியை சீனா முற்றிலுமாக தடை விதித்தது.

ஜப்பானிலிருந்து கடல் உணவுகளை அதிக அளவில் கொள்வனவு செய்யும் நாடான சீனா,இறக்குமதி அனைத்தையும் முடக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. சீனா ஜப்பானிடம் இருந்து ஒவ்வொரு வருடமும் ஒன்று தசம் ஒன்று பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான கடல் உணவை இறக்குமதி செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சீனாவால் ஜப்பானிய கடல் உணவுகளுக்கு விதிக்கப்பட்ட தடையானது ஜப்பானின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிப்பதாக உள்ளதை அந்நாடு ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி நகர்வானது சீனா மற்றும் ஜப்பானுக்கு இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது.

ஜப்பான் மீனவர்கள் மற்றும் மக்களது எதிர்ப்பு...

புகுஷிமா அணுஉலை கழிவு நீரை பசிபிக் பெருங்கடலில் திறந்து விடும் ஜப்பான் அரசின் திட்டத்தை அந்நாட்டு மக்களே ஆதரிக்கவில்லை. சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் ஜப்பானில் சரிபாதி மக்களே அரசின் திட்டத்தை ஆதரிக்கின்றனர். ஜப்பான் மீனவர்கள் மற்றும் கடலோர பகுதிகளில் வாழும் மக்களிடையே அரசின் திட்டத்திற்கு எதிர்ப்பு அதிகமாக உள்ளது. இத்திட்டத்தால் மக்கள் கடல் உணவை புறக்கணிக்கக் கூடும் என்று அஞ்சுகின்றனர். இதனால் தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் சீர்குலைந்து விடும் என்று உள்ளூர் மீனவர்கள் கவலைப்படுகின்றனர்.

“அணுக்கழிவு நீரை பசுபிக் கடலில் கலப்பதை விட சிறந்த வேறு பல தீர்வுகள் இருக்கக்கூடும்.ஆனால் அவர்கள் இந்த நீரை கடலில் திறந்து விட முடிவு செய்துள்ளனர். இதனால் உலகிற்கும் பிரச்சனையே, இதனை ஏற்றுக் கொள்ளவே முடியாது” என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய ஜப்பானிய மீனவர்கள் தெரிவித்தனர்.

கழிவுநீர் பசுபிக் கடலில் சேர்ப்பதனால் கடல் நீர் மாசுபாட்டை ஊக்குவிக்க கூடும். கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் உணவுச் சங்கிலியில் தாக்கத்தை ஏற்படுத்தும். காலநிலை மாற்றம், கடல் அமிலமயமாதல், அதிகப்படியான மீன் பிடித்தல் மற்றும் மாசுபாடு ஆகியவற்றால் உலகப் பெருங்கடல்கள் ஏற்கனவே அழுத்தத்தில் உள்ளன. கதிர்வீச்சினுடைய வீரியம் குறைக்கப்பட்டாலுமே கூட அதன் நீண்ட கால விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது. ஏற்கனவே பசுபிக் பெருங்கடலின் வளமானது முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது. பலவகையான கடல்வாழ் உயிரினங்கள் அழிவடைந்துள்ளன.இந்நிலையில் ஜப்பானுடைய அணு உலைக்கழிவு நீர் அகற்றும் திட்டமானது பெரும் பாதிப்பை கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படுத்தகூடும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்பு ,அணு உலையில் இருந்து கழிவு நீரை கலப்பதனூடாக கடல் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் மனிதனுடைய மரபணுவில் மாற்றத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளது. அணுஉலை அழிவடைந்த பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் பூக்கும் பூக்கள், பழங்களது மரபுப்பிழை காரணமாக வடிவம் மாறுபட்டும்,வடிவம் வழமைக்கு மாறாக உள்ளது. அவற்றிற்கே இந்நிலைமை என்றால் மனிதர்களுக்கு எவ்வாறான பாதிப்பு ஏற்படும் என்பதை யூகிக்க முடியாது.

# சந்திரன் "இந்து ராஷ்டிரியம்" நாடு



இஸ்ரோ விஞ்ஞானிகளால் நிலவை நோக்கி ஏவப்பட்ட சந்திரயான்-3 விண்கலமானது, கடந்த ஒகஸ்ட் 23ம் திகதி விக்ரம் லேண்டரை நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறக்கி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

விக்ரம் லேண்டரானது நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய பின், லேண்டரின் உட்பகுதியில் இருந்து வெளிவந்த ரோவர் வாகனம் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கி 14 நாட்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது. நிலவில் விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதியை சிவசக்தி என பிரதமர் மோடி குறிப்பிட்டு இருந்தார்.

இந்நிலையில், சந்திரயான்-3 விண்கலம் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியதையடுத்து, அகில இந்திய இந்து மகா சபையின் தேசியத் தலைவர் சக்கரபாணி சமீபத்தில் ஒரு வீடியோவில் கூறுகையில், சந்திரனை "இந்து ராஷ்டிரியம் " என தனி நாடாக அறிவிக்க வேண்டும் எனவும்,

இந்து ராஷ்டிரிய நாட்டின் தலைநகராக லேண்டர் தரையிறங்கிய சிவசக்தி இடத்தை அறிவிக்க வேண்டும் எனவும் இது குறித்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்து மகா சபையின் தேசியத் தலைவர் சக்கரபாணி கேட்டுக்கொண்டுள்ளார்.

## விண்வெளிக்கு செல்லும் 'வயோமித்ரா'

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் மூன்று பேர் விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ளனர். பூமியில் இருந்து, 400 கிலோ மீட்டர்தொலைவில் மூன்று நாட்கள் விண்வெளியில் இவர்கள் ஆய்வு செய்வர். பின்னர் மீண்டும் பூமிக்கு அழைத்துவரப்படுவர்.

ககன்யான் திட்டத்தில் மனித பாதுகாப்பு மிக முக்கியமானது. இதை உறுதி செய்வதற்காக, பொறியியல் அமைப்புகள் மற்றும் மனித மைய அமைப்புகளை உள்ளடக்கிய பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. LVM3 HLVM3 ராக்கெட் மூலம் இஸ்ரோவின் ககன்யான் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.




பெங்களூரில் நிறுவப்பட்ட விண்வெளி வீரர் பயிற்சி மையத்தில் வகுப்பறை பயிற்சி, உடல் தகுதி பயிற்சி, சிமுலேட்டர் பயிற்சி மற்றும் விமான உடை பயிற்சி ஆகியவற்றை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது சுற்றுப்பாதை தொகுதி தயாரிப்பு முடிந்து, ககன்யான் ஏவுதளத்தை மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணமான ககன்யான் திட்டத்தின் 2வது சோதனையில் "வியோமித்ரா" என்ற பெண் ரோபோவை விண்வெளிக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாக மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.

உத்தரபிரதேசம்

## வாய்ப்பாடு தவறால் கன்னம் வீங்கிய மாணவன்



உத்தரபிரதேச மாநிலம் முசாபர்நகர் மாவட்டம் ஹக்பர்பூர் கிராமத்தில் உள்ள பாடசாலையில் 2-ம் வகுப்பு மாணவன் கணக்கு வாய்ப்பாடை தவறாக கூறியதாலும், வீட்டுப் பாடத்தை எழுதாமல் வந்ததாலும் ஆசிரியை திருப்தி தியாகி சக மாணவர்களை அழைத்து மாணவன் கன்னத்தில் அறையும் படி கூறியுள்ளார்.

இதனை மாணவனின் உறவினர் தனது அலைபேசியில் வீடியோவாக எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார். வீட்டுப்பாடம் எழுதி வராத மாணவனை மதரீதியிலாக விமர்சித்து சக மாணவர்களை கொண்டு தாக்குதல் நடத்தியதாக ஆசிரியை மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவனை தாக்கிய சம்பவம் தொடர்பாக சர்ச்சையில் சிக்கிய ஆசிரியை, "எனது தவறை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதற்காக நான் வெட்கப்பட மாட்டேன். அந்த மாணவனை மத ரீதியில் துன்புறுத்த வேண்டும் என்பது என் நோக்கம் இல்லை. இந்த சம்பவம் தேவையில்லாமல் பெரிய பிரச்சினையாக மாற்றப்பட்டு இருக்கிறது," என்று தெரிவித்துள்ளார்.

பல்கேரியா

## "மணமகள் சந்தை"

நம் அன்றாட வாழ்க்கையில் இதுவரை பல வகையான சந்தைகளை பார்த்திருப்போம், கேள்வியும்பட்டிருப்போம். ஆடை சந்தைகள், காய்கறி சந்தைகள், செல்லப்பிராணி சந்தைகள், தானிய சந்தை என சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் பல்கேரியா நாட்டில் மணமகள் சந்தை என்ற ஒன்று உள்ளது. இந்த சந்தை முற்றிலும் அந்நாட்டு அரசின் அனுமதி பெற்று நடக்கும் ஒரு சந்தை ஆகும் . இந்த சந்தையில் மக்கள் அலைந்து திரிந்து தங்களுக்கு பிடித்த மனப்பெண்களை




தேர்வு செய்து வாங்கி செல்கின்றனர்.

இந்த சந்தையானது அந்நாட்டில் அனைத்து பெண்களுக்கும் பொருந்தாது, ஏழை பெண்களுக்காக மட்டுமே இந்த மணமகள் சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

திருமணம் என்றாலே எக்கச்சக்க செலவாகும், அந்த செலவுகளை செய்ய இயலாத பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்கள், தங்களின் மகள்களை இந்த சந்தைக்கு அழைத்து செல்கின்றனர். அங்கு ஆண்கள் தங்களுக்கு பிடித்த பெண்களை தகுந்த விலை கொடுத்து வாங்கி மனைவியாக ஏற்று வாழத் தொடங்குகின்றனர்.

சந்தையில் விற்கப்படும் மணமகளை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு பல நிபந்தனைகள் வைக்கப்படுகின்றன. கலையடி சமூகத்தினர் தங்களின் மகள்களை இந்த சந்தையில் விற்கின்றனர்.


பிரான்ஸ்

## அரசு பள்ளிகளில் "அபாயா" அணிய தடை

அரசு நடத்தும் பள்ளிகளில் இஸ்லாமிய பெண்கள் அணியும் தளர்வான, முழு நீள அங்கியான அபாயா (பர்தா) எனப்படும் ஆடையை அணிவதை தடை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரான்ஸ் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், 19ம் நூற்றாண்டு சட்டங்கள் பொதுக் கல்வியில் இருந்து பாரம்பரிய கத்தோலிக்க செல்வாக்கை நீக்கியதில் இருந்து அரசு பள்ளிகளில் மத அடையாளங்களுக்கு கடுமையான தடையை அமல்படுத்தியது.

மேலும், வளர்ந்து வரும் முஸ்லீம் சிறுபான்மையினரைக் கையாள்வதற்கான வழிகாட்டுதல்களை புதுப்பிக்கவும் போராடியது. 2004ம் ஆண்டில், பள்ளிகளில்



முக்காடு அணிவதைத் தடைசெய்தது மற்றும் 2010ம் ஆண்டில் பொது இடங்களில் முழு முகத்தை மூடுவதற்குத் தடை விதித்தது.

இந்நிலையில், "பள்ளிகளில் இனி அபாயா அணிய முடியாது என்று முடிவு செய்துள்ளேன்" என்று கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டல் கூறினார். "நீங்கள் வகுப்பறைக்குள் செல்லும்போது, மாணவர்களைப் பார்த்து அவர்களின் மதத்தை நீங்கள் அடையாளம் காண முடியாது," என்று அவர் கூறினார்.

இங்கிலாந்து

## ரிமோட் கன்ட்ரோல் மூலம் குட்டி காரை இயக்கி உலக சாதனை

சமீபகாலமாக இளைஞர்கள் பல்வேறு வகைகளிலும் தங்களது திறமைகளை நிரூபித்து கின்னஸ் சாதனை படைத்து வருகின்றனர். அந்த வகையில், ரிமோட் கன்ட்ரோல் மூலம் காரை 152 கிலோ மீட்டர் வேகத்தில் இயக்கி இங்கிலாந்தை சேர்ந்த ஜேம்ஸ் வோம்ஸ்லி என்ற வாலிபர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இவர் தயாரித்த கார் பார்ப்பதற்கு மிகவும் சிறியதாக இருக்கும். ரிமோட் கன்ட்ரோல் மூலம் இயங்கும் இந்த கார் ஜெட் என்ஜின் மூலமாக தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக ரிமோட் கன்ட்ரோல் மூலம் குறைவான வேகத்தில்




தான் கார்களை இயக்க முடியும். ஆனால் ஜேம்ஸ் வோம்ஸ்லி மணிக்கு 152.50 கிலோ மீட்டர் வேகத்தில் கார்களை இயக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு யாரும் ரிமோட் கன்ட்ரோல் மூலம் இந்த வேகத்தில் கார்களை இயக்கியது இல்லை. இதற்கு முன்னர் அவர் 137 கிலோ மீட்டர் வேகத்தில் ரிமோட் மூலம் குட்டி காரை இயக்கி இருந்தார். அப்போது அதில் சில பகுதிகள் உடைந்தது. பின்னர் அதனை சரி செய்து 141 கிலோ மீட்டர் வேகத்தில் இயக்கினார்.

உலகத் தடகள சம்பியன்ஷிப்பில்

# தங்கம் வென்றார் நீரஜ் சோப்ரா

ஹங்கேரியில் நடைபெற்ற உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஈட்டியெறிதலில் 88.17 மீற்றர் தூரம் எறிந்தே 25 வயதான சோப்ரா, உலகத் தடகள சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதலாவது இந்தியராக மாறினார்.

இந்த ஈட்டியெறிதலில் வெள்ளிப் பதக்கத்தை 87.82 மீற்றர் தூரம் எறிந்து பாகிஸ்தானின் அர்ஷாட் நதீம் பெற்றிருந்தார்.




சிநேகபூர்வப் போட்டியில்

## பேர்ள்ஸை வென்ற எமரெல்ட்



அஸ்ஹர் இப்றாஹீம்

மாவடி பேர்ள்ஸ் விளையாட்டுக் கழகத்துடனான சிநேகபூர்வ கடினபந்துப் போட்டியில் நிந்தவூர் எமரெல்ட் விளையாட்டுக் கழகம் வென்றது.

நிந்நவூர் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற எமரெல்ட் விளையாட்டுக் கழகம், முதலில் துடுப்பெடுத்தாடி 17 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 144 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பேர்ள்ஸ், 17 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களையே பெற்று ஐந்து ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டம்:

## சம்பியனாகின களுகமுவ மத்திய கல்லூரி, கம்பளை சாஹிரா

அஸ்ஹர் இப்றாஹீம்

மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகளில் களுகமுவ மத்திய கல்லூரி, கம்பளை சாஹிராக் கல்லூரி ஆகியன சம்பியனாகின.

கம்பளை வீகுலுவத்த, சாஹிராக் கல்லூரி மைதானங்களில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டிகளில் 16 வயதுக்குட்பட்டோரின் இறுதிப் போட்டியில் கண்டி திருத்துவக் கல்லூரியை களுகமுவ மத்திய கல்லூரியும், 18 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் கொட்டகல தமிழ் மகா வித்தியாலயத்தை வென்று களுகமுவ மத்திய கல்லூரியும், 20 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியை வென்று கம்பளை சாஹிராக் கல்லூரியும் சம்பியனாகின.










இத்தாலிய சீரி ஏ தொடர்

## சமநிலையில் ஜுவென்டஸ் பொலொக்னா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொலொக்னாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 29 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.